முருகப்பெருமான் துணை

**உலக ஞானத் தலைவன் முருகப்பெருமான் அருளிய அருள்வாக்கு**

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்** பாகம் : 1681

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**06.05.2024**, திங்கட்கிழமை

1. அறம் வளர்க்கின்ற வள்ளலே
   அண்ணலே ஆறுமுக அரங்கனே
   வரம் தருகின்ற அரங்கனே
   வள்ளலே வையகத்தைக் காக்கும் ஞானியே
2. ஞானியே ஆறுமுக அரங்கனே
   ஞாலமதில் உந்தனுக்கு சுப்ரமணியர் யானும்
   இனிமைபட ஞான அறிவுரை ஆசி
   இயம்பிடுவேன் குரோதி தகர் திங்கள் தன்னில்
   (குரோதி வருடம் சித்திரை மாதம் 23 ம் நாள், 06.05.2024, திங்கட்கிழமை)
3. தன்னிலே அரங்கன் சக்தி பெருகி வர
   தக்கபடி சூட்சுமமாய் தண்டாயுதன் யானும்
   அண்ணலுக்கு ஆற்றல் கூட்டி வருகின்றேன்
   அனுதினமும் பிரம்ம வேளை சக்தி ஊட்டி
4. ஊட்டியே அரங்கனை காத்து நன்கு
   உலகோர்க்கும் சேவை ஆற்ற உத்தமமாய் பெரும் துணை புரிகின்றேன்
   புரியவே அரங்கன் தொடர்பு கூட்டி
   பிரணவக்குடிலில் சரணாகதி கொண்ட மக்களெல்லாம்
5. அறிவு தெளிவு திடம் ஞானமோடு
   அழியாமை பெற்று உயர்வது உறுதியப்பா
   உறுதி தந்து ஓங்காரக்குடிலில்
   உயர்வான தர்மத்தை வளர்த்து வருகின்றேன்
6. கருதி வந்து அரங்கன் தர்மத்தில்
   கணக்கிலா பொருளுதவி செய்து கொண்டு
   செய்து கொண்டு தன் கருமவினை அகலும் வண்ணம்
   செகத்தார் அளவிலா பொருளுதவியாலே

7. செப்பிடுவேன் தர்மவான்களாக மாறியே
மறுப்பின்றி வினைநீக்கம் பெறுவதோடு
மரணமில்லா பெருவாழ்வும் அடைவது உறுதி உறுதி
ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–